<u>**சார்பு நீதிமன்றம், அரூர்**</u>

<u>**நாள் – 23.09.2025**</u>

**OS.229/2018**

**வா.சா. 1 திருமதி.புஷ்பலதா**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

<u>**8, 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு சேரவேண்டிய பங்கை கேட்டு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன், மேலும் எனக்கு தெரியாமல் செய்த கிரய பத்திரத்தை ரத்துசெய்யவும் கேட்டுள்ளேன். நான் யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன், என்றால் ராணி, இளங்கோ, தமிழரசன், மோகனா, வெள்ளையன் ஆகியோர் மீது தாக்கல் செய்துள்ளேன். மோகனா, தமிழரசை எதற்காக இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவர்கள் அனைவரும் சேர்ந்துதான் எனக்கு தெரியாமல் திருட்டு கிரையம் செய்துள்ளனர். தாக்கல் செய்துள்ள வழக்கில் கண்டுள்ள சொத்து சின்னன்னன் என்பவருக்கு D–காடு பட்டா மூலம் சுயமாக பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல, அது பரம்பரை சொத்துதான். D–காடு பட்டா மூலம் பாத்தியப்பட்ட சொத்தை சின்னன்னன் எல்லோரும் அறிய அவர் தான் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. சின்னன்னனுக்கு சுயமாக பாத்தியப்பட்ட சொத்தை 3ம் பிரதிவாதி ராணிக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் அது பொதுசொத்து, 20 வருடத்திற்கு முன்பே அந்த சொத்தை எங்களுக்கு வாய்மொழியாக கொடுத்துவிட்டார்கள்.

3ம் பிரதிவாதி ராணி கிரையம் பெற்ற நாள் முதல் அவருடைய சுவாதின அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல, நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம்.

2. ராணி கிரையம் வாங்கிய நாள் முதல் அவர் பெயரில் தான் வருவாய் ஆவணங்கள் அனைத்தும் உள்ளது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி ராணி நிலத்துக்கு செலுத்தவேண்டிய கந்தாயம் முதலியவற்றை செலுத்தி எங்களுக்கும் தெரிந்துதான் அவர் கிரையம் பெற்ற சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல, நாங்கள் தான் அனுபவத்தில் இருக்கிறோம். 3ம் பிரதிவாதி ராணி கிரையம் பெற்ற சொத்தை அவர் அனுபவத்தில் இருப்பதை மறைத்தும், பொய்யான சங்கதிகளை சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 8ம் பிரதிவாதி மோகனா, 9ம் பிரதிவாதி தமிழரசு ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு அவர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.09.23 17:06:42 +0530